# என் உலகம்

எட்டுத் திசையும்
என் உலகம்

எல்லா உயிரும்
என் உறவு

இயற்'கை' எழுதிய
கவிதை இந்தப் பூ உலகம்

செயற் 'கை' கொண்டு
அழிப்பது பேர் அவலம்

மரங்கள் இந்த பூமிக்குச்
சாமரங்கள்

இயற்கைத் தந்த வரங்களே
தாவரங்கள்

காட்டில் தகனம்
மனிதனின் ஈமக்காரியம்

காடுகளே தகனம்
மனிதனின் ஈனக்காரியம்

# கல்

செதுக்கப்பட்ட சிலைகளில் எனக்கு
கலைஞன் தெரிகிறான்

செதுக்கப்படாத மலைகளில் மட்டும்
இறைவன் தெரிகிறான்

மலையைக் கொண்டு மனிதன்
எதையும் செய்வான்

எதனைக் கொண்டு மனிதன்
மலையை செய்வான்

வெளியில் உள்ள கற்களெல்லாம்
கருவரை சென்று கடவுளாகும் போது

கருவரைக்குள் செதுக்கப்பட்ட மனிதன்
வெளியில் ஏன் கல்லாய் வாழ்கிறான்

# வேர்

மரங்களின் சுவாசம் நின்றுபோனால்
மனித இனம் மாண்டு போகும்

மரங்களின் சுவாசத்தை மனிதன் சுவாசிக்கிறான்
மனிதனின் சுவாசத்தை மரங்கள் சுவாசிக்கின்றன

வேதியியலையும், இயற்பியலையும் விட
மேலானது உயிரியலும், தாவரவியலும்

மனிதனின் அறிவியல் அழித்துக் கொண்டிருக்கிறது
இயற்கையின் புவியியலை

மலர்களோடு நிறுத்திக் கொள்ளுங்கள்
மரங்களையும் பறிக்காதீர்கள்

இயற்கை சீற்றங்களை விட அதிகம்
செயற்கை சீற்றங்கள்

## பச்சை வானம்

குடை பிடித்த மனிதர்களைத்
தவிர்த்து - நான்

மழை பிடித்த மனிதர்களோடு
நனைகிறேன்

வெயிலில் காய்கின்ற
பூமிக்கு

குடைபிடிக்கும் மேகத்தை
நான் காண்கிறேன்

வானவில்லில் இருந்து வருகின்ற
அம்புகள் தாக்க ஏங்கினேன்

மழை நின்ற பின்னும்
மரங்கள் தொடர்கிறது

வானம் பொழிவதில்லை
வனங்கள் தான் பொழிகின்றன

## நிலாச்சோறு

பெற்றவளைக் காக்கும் நீ
சுமப்பவளை மறந்த தென்ன

அமுது தந்த நிலத்தை விட்டு
நிலவைக் காட்டி உண்பதென்ன..

மண்ணெண்ணைப் புகையில் சுவாசிக்கத்
திணறுகிறாள் மண் அன்னை

மனிதனின் குளிர்சாதனங்கள்
உலகை தீமூட்டும் சாதனங்கள்

உங்கள் கைபேசிகள் கொத்தித் தின்றன
எங்கள் பறவைகளை

மக்கா குப்பைகளைக் கொட்டிக் கொண்டிருக்கிறது
மக்கும் குப்பைகள்

அந்த கட்டடங்களுக்கு நடுவே
புதைக்கப்பட்டது எங்கள் வயல்கள்

# தாய்

'மண்' அவளே தாயானாள்
எனக்கும் எந்தன் அன்னைக்கும்

மீண்டும் அவள் தாயாவாள்
நாளை எந்தன் பிள்ளைக்கும்

பெண் சுமந்த நாள் முதலாய்
என்னை மண் சுமந்தாலே

கருவறையைச் சுமப்பவளைத்
தாய் என்று சொல்லும் போது

கல்லறையைச் சுமப்பவளை
சொல்லவே வார்த்தை ஏது

அம்மா, என் அம்மா, அம்மா அம்மம்மா...

## கூடுகள்

விண்ணில் பறக்கும்

பறவையெல்லாம்

மண்ணில் கூடு

கட்டுகையில்

காடுகள் எதையும்

அழிப்பதில்லை

கூண்டுகள் எதையும்

ஏற்பதில்லை

மனிதன் எல்லாம்

கண்டறிந்தான்

இயற்கையை ஏனோ

விட்டெறிந்தான்